**<u>2026 பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 180/2022</u>**

MCOP No.: 180/2022 – முருகேஸ்வரி PW1 04.02.2026

க/பெ.கோட்டைச்சாமி

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, 3 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. விபத்து சமயத்தில் எனது கணவர் TN 58 AW 8937 Tata Ace வாகனத்தை ஓட்டிச்சென்ற போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். 26.11.2021 ம் தேதியன்று எனது கணவர் உசிலம்பட்டியிலிருந்து திருப்பூர் சென்றுவிட்டு, 27.11.2021 ம் தேதி அதிகாலை 03.50 மணியளவில் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளரின் பெயர் எனக்குத் தெரியுமா என்றால் அவரது பெயர் பாண்டி. இம்மனுவில் அவரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினர்களாக கட்சிச் சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தானது செம்பட்டி–வத்தலக்குண்டு பிராதான தேசிய நெடுஞ்சாலை என்றாலும், சாலை நீண்ட அகலமான இருக்கும் என்றாலும் சரிதான்.

2. விபத்தானது எதிரே வந்த TN 41 AK 5976 என்ற பதிவெண்கொண்ட லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் அந்த லாரி தான் எனது கணவர் ஓட்டிச்சென்ற Tata Ace வாகனத்தின்மீது மோதியது. சாலையின் நடுவில் இடப்பட்டுள்ள கோட்டின் அருகே தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சாலையின் நடுவில் நடந்தது என்றாலும், நான் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் பதிவு சான்றிதழோ, காப்பீட்டு சான்றிதழோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

இல்லை. எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் காப்பீட்டை தாக்கல் செய்து நிரூபணம் செய்யாததால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

3. எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நகல் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சாலையின் நடுவில் நடைபெற்றதாக வரையப்பட்டுள்ளது என்பதற்காக அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆவணத்தில் இறந்த எனது கணவரின் விசிரா மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, அதன் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கை தாக்கல் செய்தால் எனது கணவர் மது அருந்தி வாகனத்தை ஓட்டிய விபரம் தெரிந்துவிடும் என்பதற்காக விசிரா அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4. விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் ஓட்டுநராக பணிபுரிந்து மாத வருமானம் ரூ.18,000/- பெற்று வந்தார் என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் எனது கணவர் மாத வருமானம் ரூ.18,000/- பெறவில்லை என்றாலும், அவ்வாறு வருமானம் பெற்றிருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தின்

மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கையை தாக்கல் செய்தால் Tata Ace வாகனத்தின் முன்பகுதியில் சேதாரம் ஏற்பட்ட விபரம் தெரிந்துவிடும் என்பதற்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. எனது கணவர் 26.11.2021ம் தேதி புறப்பட்டு, ஜாமான்களை ஏற்றிவிட்டு, 27.11.2021ம் தேதி ஓய்வு எடுக்காமல் வாகனத்தை தொடர்ந்து இயக்கிவந்ததால், அவருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டதாலும், எதிரே வந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதாலும், எதிரே வந்த லாரி வாகனத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்ததாக நிரூபணம் செய்யாததாலும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.04 17:57:04 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
04.02.2026